# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044–2838 9038; email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in


**Lr. No.TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/ 250** **Date: 11.09.2018**

முனைவர் நா.இரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து எம்.எட். கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – எம்.எட் சேர்க்கை – பல்கலைக்கழக இணைவு பெற்ற அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - எம்.எட் சேர்க்கை மற்றும் சேர்க்கைக்கான தகுதிக்கட்டணம் செலுத்த கடைசி நாள் - மேலும் கூடுதல் தகவல்கள் அறிவித்தல் - தொடர்பாக.

பார்வை: இப்பல்கலைக்கழக கடித எண்:TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/244, நாள் 10.09.2018.

-------

பார்வையில் கண்ட இப்பல்கலைக்கழகக் கடிதம் வாயிலாக, அனைத்து எம்.எட் கல்வியியல் கல்லூரிகளுக்கு, நடப்புக்கல்வி ஆண்டுக்கான (2018-2019) எம்.எட் சேர்க்கைக்கு கடைசி நாள் 17.09.2018 என்றும், அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புப் பணிகள் 28.09.2018, 01.10.2018 மற்றும் 02.10.2018 ஆகிய மூன்று நாட்களில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. **அதில் 02.10.2018 அன்று நடைபெறுவதாக இருந்த அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புப் பணிகள் மட்டும் 03.10.2018 ஆம் தேதி நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளில், மாணவர்கள் எம்.எட் சேர்க்கைக்கு செலுத்தவேண்டிய கட்டணம், சுய நிதிக்கல்லூரிகளை ஒப்பிடுகையில் மிக மிகக்குறைவாக அரசு நிர்ணயித்துள்ளது. இருப்பினும், கடந்த கல்வி ஆண்டில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளில் ஒரு சில எம்.எட் இடங்களில் மட்டுமே மாணவர்கள் சேர்க்கை பெற்று பெரும்பாலான எம்.எட் இடங்கள் காலியாகவே உள்ளன. ஆனால், சுயநிதிக் கல்வியியல் கல்லூரிகளில் பெரும்பாலும், அனைத்து 50 எம்.எட் இடங்களிலும் மாணவ மாணவிகள் சேர்க்கை பெற்றுள்ளதாக பல்கலைக்கழக புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

மேலும், மாணவர்கள் எம்.எட் வகுப்புகளுக்கு வராமலும், கல்லூரியில் தகுதிவாய்ந்த 10 ஆசிரியர்கள் இல்லாமலும், பல சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் எம்.எட் படிப்பை நடத்துவதாக வந்த பல்வேறு புகார் மனுக்கள் மற்றும் கடந்த ஆண்டில் பல்கலைக்கழகம் நடத்திய திடீர் ஆய்வின் மூலம் பெற்ற அறிக்கைகளின் அடிப்படையில், கீழ்க்கண்ட நடைமுறைகளை எம்.எட் பட்டபடிப்பை வழங்கும் அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளும், நடப்புக் கல்வி ஆண்டில் (2018-2019) கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என இப்பல்கலைக்கழகம் அறிவுறுத்துகிறது.

1. குறைந்த பட்சம் 50 மாணவர்கள் கொண்ட எம்.எட் படிப்பை அளிப்பதற்கு பத்து தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் வேண்டும். அதற்கு பல்கலைக்கழகத்தின் ஒப்புதல் (Staff approval order) பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு பல்கலைக்கழக ஒப்புதல் பெற்ற கல்லூரிகள் மட்டுமே மாணவர்களை எம்.எட் படிப்பில் சேர்க்கை செய்ய வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெற்ற 10 ஆசிரியர்களும் தற்போது பணியில் இருத்தல் மிக அவசியம்.

2. அசல் சான்றிதழ் சரிபார்ப்புக்கு வரும்போது அவசியம், ஏற்கெனவே தெரிவித்துள்ள ஆவணங்களோடு, பத்து ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகம் வழங்கிய தகுதி ஒப்புதல் ஆணையினை (Staff approval order) சமர்ப்பிக்க வேண்டும்.

3. பல்கலைக்கழகம் வழங்கிய 10 ஆசிரியர்களுக்கான தகுதி ஒப்புதல் ஆணையில்லாமல், மாணவர்களை எம்.எட் படிப்பில் சேர்க்கை செய்துவிட்டு, மாணவர்களின் அசல் சான்றிதழ்களைச் சரிபார்க்க இப்பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வர வேண்டாம் என முன்கூட்டியே தெரிவிக்கப்படுகிறது.

11/9/18

பதிவாளர் (பொ)